## வேலூரில் வெடித்த முதல் சுதந்திரப் போர்!

## "மறைக்கப் பட்டதா... மறந்து போனதா?"




இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் ஆறு வீரர்கள் பீரங்கிக் குழாய்களின் முனையில் கட்டடப்பட்டிருக்கிறார்கள். தொலைவில் ஒரு வெள்ளை அதிகாரி உத்தரவிடும் குரல் கேட்கிறது. பீரங்கிகள் வெடிக்கின்றன. கட்டப்பட்டிருந்த வீரர்களின் உடல்கள் பீரங்கிக் குண்டுகளோடு சேர்ந்து வானத்தில் வெடித்துச் சிதறுகின்றன. ஆயிரம் துண்டுகளாக சிதறிய அந்த உடல்கள், தரையில் விழுவதற்கு முன்பே காக்கை, கழுகுகளால் கவ்விச் செல்லப்படுகின்றன. மேலும் ஐந்து பேர் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். கொஞ்ச தூரத்தில் எட்டு உடல்கள் தூக்குமரங்களில் தொங்குகின்றன.

அவர்கள் செய்த குற்றம் என்ன? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு எதிராகக் கலகத்தில் ஈடுபட்டார்கள் என்பதுதான் அவர்கள் மீதான குற்றச்சாட்டு. அவர்கள், இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்ட வீரர்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

1857-ல் வடநாட்டில் நடந்த சிப்பாய் கலகத்தைதான் முதல் சுதந்திரப் போராட்டமென்று நமது பாடப் புத்தகங்கள் சொல்கின்றன. இந்தியாவின் வட பகுதியில் நடந்தவை மட்டுமே வரலாறு எனக் கருதப்படும் இந்த நாட்டில், தமிழ்நாட்டின் தலைவர்களுக்கு மட்டுமல்ல... போராட்டங்களுக்கும்கூட இடமிருப்பதில்லை.



பதினான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்ட வேலூர் கோட்டை, 1806-ம் ஆண்டு ஜூலை மாதம் பத்தாம் நாள் நிலவொளியில் நனைந்து கொண்டிருக்கிறது. வெக்கையும் தூங்குகிற விடிகாலை நேரம். திடீரென துப்பாக்கிகள் வெடிக்கின்றன. அலறல் ஒலிகள் காற்றைத் தட்டி எழுப்புகின்றன. பிரிட்டிஷ் படையில் இருந்த இந்திய சிப்பாய்கள் வெள்ளைக்கார சிப்பாய்களையும், அதிகாரிகளையும் சுட்டுத் தள்ளியபடி மருத்துவமனையை நோக்கி ஓடுகிறார்கள். அங்கே இருந்த வெள்ளைக்கார நோயாளிகளையும் விட்டு வைக்கவில்லை. சப்தம் சற்றே ஓய்ந்தபோது பதினான்கு அதிகாரிகள், நூறு வீரர்கள் பிணங்களாக சரிந்து கிடந்தனர்.

'வேலூர் கலகம்' என வரலாற்றின் ஓரத்தில் குறிக்கப் பட்டுள்ள இந்த சுதந்திரப் போரைப் பற்றி ஒரு சிலரே எழுதியிருக்கிறார்கள். அதனால்தான் அரசாங்கங்கள்கூட இதைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஆனால், 1857-ம் ஆண்டின் சிப்பாய் கலகத்தைப் பற்றி இந்திய அரசு மட்டுமல்லாமல், இந்தித் திரைப்பட உலகமும் பெருமைப்பட்டுக் கொள்கிறது. அதன் 150-ம் ஆண்டு நினைவைக் கொண்டாட, நூறு கோடி ரூபாய்க்கு மேல் செலவிட இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால், வேலூர் கலகத்தை ஒரு தனியார் பல்கலைக்கழகம்தான் இப்போது நினைவுகூர்கிறது. என்னவொரு முரண்பாடு?

விஜயநகரப் பேரரசில் கட்டப்பட்ட வேலூர் கோட்டையை 1677-ல் வீரசிவாஜி கைப்பற்றினார். பின்னர் கிழக்கிந்தியக் கம்பெனியின் கையில் 1768-ம் ஆண்டு அந்தக் கோட்டை வந்தது. கலகம் நடந்தபோது, பிரிட்டிஷ் ராணுவத்தின் நான்கு கம்பெனிகள் அந்தக் கோட்டையில் இருந்தன. 1500

இந்திய வீரர்கள் 370 ஆங்கில சிப்பாய்கள்.



பிரிட்டிஷ் படைக்குள் நீண்ட காலமாகவே அதிருப்தி நிலவி வந்தாலும், கலகம் வெடிப்பதற்கு காரணமாக அமைந்தது ராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'தொப்பி'தான். கிழக்கிந்தியக் கம்பெனியில் 'டிரம்ஸ்' வாசிப்பவர்கள் அணிந்திருக்கும் தொப்பியைப்போல அது இருப்பதாக இந்திய சிப்பாய்கள் குறைபட்டுக் கொண்டனர். 1806 ஏப்ரல் மே மாதங்களில் ராணுவ வீரர்களுக்கு அந்த தொப்பி விநியோகிக்கப் பட்டது. அவ்வருடம் மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய 'டிரஸ் கோட்' என்பதன் ஒரு பகுதிதான் அந்தத் தொப்பி. கர்னல் ஆக்னியூ என்பவர்தான் அதை அறிமுகப்படுத்தியவர்.

உடனேயே ஆங்காங்கே சிறுசிறு அளவில் அதிருப்தி வெளிப்படத் தொடங்கியது. ராணுவ நடைமுறைகளின் பிரிவு ஆறு, பத்தி ஐந்தில் 'டிரஸ் கோட்'டுக்கான விளக்கம் தரப்பட்டிருந்தது. "தனது சாதி அல்லது மதத்தை குறிப்பிடும்படியான அடையாளம் எதையும் ஒரு ராணுவ வீரர் தனது நெற்றியில் தரித்திருக்கக் கூடாது. சீருடை அணிந்திருக்கும்போது காதுகளில் வளையங்கள் போடுவது கூடாது. சுத்தமாக சவரம் செய்திருக்க வேண்டும். மீசையைத் தனது இஷ்டம்போல் வைத்துக் கொள்ளக்கூடாது" என்பவை அப்போது புகுத்தப்பட்ட விதிகளில் சில.

இந்த நிபந்தனைகளைக் கேள்விப்பட்டதும் தமது மத உணர்வை வெள்ளைக்கார அரசாங்கம் புண்படுத்துவதாக இந்திய சிப்பாய்கள் கொதித்து எழுந்தனர். எல்லோரையும் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றுவதற்கு வெள்ளைக்காரர்கள் திட்டமிடுவதாக வதந்தி பரவியது. ராணுவ வீரர்களின் சீருடையின் ஒரு பகுதியாக மார்பு பகுதியில் அணிந்துகொள்ளும் உலோகப் பட்டையை சிலுவையோடு ஒப்பிட்டு வதந்தி கிளப்பப்பட்டது. இதனால் பல சிப்பாய்கள் புதிய தொப்பியை அணிய மறுத்தனர். அதை 'பரங்கி தொப்பி' என கேலி பேசினர். 1806-ம் ஆண்டு மே மாதம் ஆறாம் தேதி 29 சிப்பாய்கள் தொப்பியை அணிய மறுத்துத் தங்களது தலைகளில் கைக்குட்டைகளைக் கட்டிக் கொண்டனர். மன்னிப்பு கேட்க மறுத்த இரண்டு சிப்பாய்களுக்கு தொள்ளாயிரம் கசையடி தரப்பட்டது.

இந்தக் கலகத்தின் பிண்ணனியில் திப்பு சுல்தானின் குடும்பத்தினரும் இருந்தனர். அவர்கள் வேலூர் கோட்டைக்குள்தான் வசித்து வந்தனர். பிரிட்டிஷ் படையில் இருந்த இந்திய சிப்பாய்களில் பலர், முன்னர் திப்புவின் படையில் இருந்தவர்கள். அதிகாரமற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தாலும், திப்புவின் குடும்பத்தினருக்கு மக்களிடம் செல்வாக்கு இருக்கவே செய்தது. மைசூரைச் சேர்ந்த முஸ்லிம்கள், வேலூர் நகர வீதிகளில் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக கோஷமிட்டதாகவும் எல்லோரையும் கிறிஸ்தவர்களாக மாற்ற வெள்ளையர்கள் சதி செய்வதாகக் கூக்குரல் இட்டதாகவும் அரசாங்க ஆவணங்கள் தெரிவிக்கின்றன. அவர்களெல்லாம் திப்புவின் ஆதரவாளர்கள்தான்.

**திப்புவின் மகன்களான ஃபதே ஹைதர், மொகையுதீன், மற்றும் மொய்சுதீன் ஆகியோரின் தூண்டுதல்தான் வேலூர் கலகத்துக்குக் காரணம் என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பின்னர் குற்றம் சாட்டினர். கலகக்காரர்கள் வேலூர் கோட்டையில் திப்பு சுல்தானின் கொடியை ஏற்றிய சம்பவம், அதை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.**




ராணுவத்துக்கு எதிராக வெடித்த கலகம் தனது நோக்கத்தை தவற விட்டது. கொஞ்ச நேரத்திலேயே எல்லாக் கட்டுப்பாடுகளும் காற்றில் பறந்தன. எங்கு பார்த்தாலும் கொள்ளை, சூறையாடல். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கணக்குப்படி சுமார் ஐந்தரை லட்சம் பகோடாக்கள் (அப்போதைய ரூபாய்) கொள்ளையடிக்கப்பட்டன. எல்லாமே சில மணி நேரங்களில் முடிவுக்கு வந்தது. காலை ஒன்பது மணிக்கு ஆற்காட்டிலிருந்து ராபர்ட் ரொல்லோ கில்லஸ்பி தலைமையில் வந்த பிரிட்டிஷ் படை, 350 இந்திய சிப்பாய்களை கொன்று கலகத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஏழு மணி நேரத்துக்குள் சுமார் 500 உயிர்களைப் பலிகொண்டு வேலூர் கலகம் ஓய்ந்தது.

பலியானது 500 உயிர்கள் மட்டுமல்ல... அன்றைய சென்னை மாகான கவர்னராயிருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவின் பதவியும்தான்.

திப்புவின் குடும்பம், வேலூர் கோட்டையிலிருந்து காலி செய்யப்பட்டு 1807 ஜனவரியில் கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டது. இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் இதுதான். ஏன் இதை இந்தியா மறந்தது? ஏன் இதை தமிழகம் மறந்தது? ஆட்சியாளர்கள் மட்டுமல்ல... ஆராய்ச்சியாளர்களும் பதில் சொல்ல வேண்டிய கேள்வி இது. வருகிற பத்தாம் தேதி, வேலூர் கலகம் எனப்படும் முதல் சுதந்திரப் போரின் இருநூறாவது ஆண்டு விழா வேலூரில் தனியாரால் கொண்டாடப்பட இருக்கிறது. இதில் இன்றைய தமிழக முதல்வர் கருணாநிதி கலந்து கொள்ளப்போகிறார். அதிலாவது நம் கேள்விகளுக்குப் பதில் கிடைக்குமா?


வேலூர் புரட்சியின் 200வது ஆண்டு: இரண்டு படிப்பினைகள்

To read above article: [http://www.dinakaran.com/epaper/2006/july/10/8_1.jpg](http://www.dinakaran.com/epaper/2006/july/10/8_1.jpg)